# விவசாயிக்கு கைகொடுத்த தைல மரம் !



வணக்கம் என் பெயர் ரவிச்சந்திரன் த.பெ மாணிக்கம். நான் புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை வட்டம் வடுகப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவன்.

நான் நமது TNPL நிறுவனத்தில் உள்ள பண்ணைக்காடுகள் திட்டத்தின் கீழ் தைல மரங்களை நடவு செய்திருந்தேன். நிறுவனத்தில் உள்ள உயர்ரக தைல மரங்களை நடவு செய்து உரிய முறையில் பராமரித்து வந்தேன். அறுவடைகாலம் நெருங்கும் போது இருதய பிரச்சனையால் பாதிக்கப்பட்டேன். இருதய சிகிச்சைக்கு எனக்கு அதிக பணம் தேவைப்பட்டது, அப்போது நான் பயிர் செய்திருந்த தைல மரங்களை வெட்டி பணத்தை பெற்றுக் கொள்ளலாம் என நினைத்து TNPL நிறுவனத்தை தொடர்பு கொண்டு தைல மரங்களை வெட்டி பணம் தருமாறு கேட்டுக் கொண்டேன். நிறுவனமும் உடனே மரங்களை வெட்டி தக்க தருணத்தில் எனக்கு தொகையை முழுவதுமாக கொடுத்தது. அதன் மூலம் எனது மருத்துவ செலவுகளை கவனித்து என் உயிரை காப்பற்றி கொண்டேன் என்று சொல்வதை விட TNPL நிறுவனம் எனது உயிரை காப்பாற்றியது என்றே சொல்ல வேண்டும். நிலத்தில் வேறு எந்தப் பயிர் நடவு செய்திருந்தாலும் இவ்வளவு பெரிய தொகை எனக்கு முழுமையாக கிடைத்திருக்காது.

தைல மரங்கள் இயற்கைக்கு எதிரானது என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் தைல மரங்களை நடவு செய்யாமல் இருந்திருந்தால் என் உயிரை காப்பாற்றியிருக்க முடியாது. மேலும் பயன்படாமல் உள்ள நிலத்தில் தைல மரங்களை நடுவதன் மூலம் நமக்கு வருமானம் கிடைப்பதுடன் நிலமும் பாழடையாமல் பாதுகாக்கப்படுகிறது. தைல மரங்களை நடவு செய்து வளர்ப்பதன் மூலம் எனக்கு தேவையான நேரத்தில் பணம் கிடைத்தது. என்னைப் போன்று மற்ற விவசாயிகளும் TNPL பண்ணைக்காடுகள் திட்டத்தின் கீழ் தைல மரங்களை நடவு செய்து பயன் அடையலாம்.


மா.ரவிச்சந்திரன்,
த/பெ மாணிக்கம்,
வடுகப்பட்டி, மங்கனூர் (PO)
கந்தர்வக்கோட்டை (TK)
புதுக்கோட்டை (DT) 613301,
செல் 9655650078